# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

☏ 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**


ஊடக செய்தி 23 / 2017 நாள் : 06.07.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன்.

பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகை செய்தி

## ஊடகச் செய்தி

## சிவகங்கை ஆட்சியர் வளாகத்திற்குள் கலெக்டரின் கைங்கர்யத்துடன் வருவாய்த்துறை சங்க நிர்வாகிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, கைகட்டி வேடிக்கை பார்த்த காவல்துறை! தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டன ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

சிவகங்கை மற்றும் காரைக்குடி மாவட்டங்களில் வருவாய்த் துறையில் ஓராண்டு பணி முடித்த வட்டாச்சியர்களுக்கு மாற்று இடங்களில் பணி வழங்கக் கோரியும், கூர்மப் பணியிடங்களில் முதுநிலை வரிசையை பின்பற்ற வலியுறுத்தியும் தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகள், பிரதிநிதித்துவ கடிதங்கள் போன்றவற்றை சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியும் பயனில்லாததால் கடந்த 19.6.2017ம் தேதி மேற்கண்ட பிரச்னைகளுக்காக சிவகங்கை மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து பேசி ஒரு சுமூக முடிவு எட்ட நேரம் ஒதுக்க கேட்டபோது மாவட்ட ஆட்சியர் திருமதி.சு. மலர்விழி சங்க நிர்வாகிகளை சந்திக்க மறுத்துள்ளார். கோரிக்கைகளை நேரில் கேட்டு பிரச்னைகளை தீர்க்க வேண்டிய மாவட்ட ஆட்சியரே அதை மறுதலித்த நிலையில், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநில மையம் 6 மாவட்டங்களைச் சேர்ந்த 1000 வருவாய்த் துறை அலுவலர்கள் பங்கேற்கும் ஆவேச தர்ணா போராட்டத்தை 4.7.2017ம் தேதி நடத்த தீர்மானித்து நடவடிக்கை மேற்கொண்டது.

மேற்படி தர்ணா போராட்டத்தை முறைப்படி நடத்த காவல்துறையினரிடம் அனுமதி கேட்டு 21.6.2017ம் தேதி கடிதம் கொடுத்து அதை காவல் துறையினர் வாங்கி வைத்துக் கொண்டு எந்த முடிவும் சொல்லாத நிலையில், தர்ணா போராட்டத்துக்கான ஆயத்தப் பணிகள் அழுத்தமான பிடிப்புடன் மேற்கொள்ளப்பட்டன. போராட்டத்துக்கான ஆயத்த ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுவிட்ட நிலையில், வருவாய்த் துறை அலுவலர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்ட அலுவலர்கள் ஒரு சிலர் எதிரணியாக தங்களை கூறிக்கொண்டு 4.7.2017ம் தேதி அதே இடத்தில் போராட்டம் நடத்திட அனுமதி கேட்டு 29.6.17ம் தேதி கடிதம் கொடுத்ததை காரணம் காட்டி, சிவகங்கை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தர்ணா போராட்டம் நடத்த அனுமதி மறுத்து 3.7.2017ம் தேதி செயல் முறை ஆணை பிறப்பித்துள்ளார். அவருடைய ஆணையில் மாற்று இடம் காட்டப்படாததோடு, போராடும் அரசு

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


ஊழியர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அடிப்படை உரிமைகளை நசுக்கும் நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் அனுமதி மறுப்பை மீறி தர்ணா போராட்டம் நடத்துவதில் உறுதியுடன் களத்தில் நின்றது வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கம்.

சங்கத்தினரின் உறுதிப்பாட்டை அறிந்த சிவகங்கை மாவட்ட நிர்வாகம், சங்கத் தலைவர்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரை 5.7.2017ம் தேதி நேரில் சந்தித்துப் பேச 3.7.2017ம் தேதி மாலையில் அனுமதி வழங்கியதன் காரணமாக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு தயார் நிலையில் இருந்த போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

5.7.2017ம் தேதி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவருமான தோழர் எஸ்.பார்த்திபன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் தமிழரசன் மற்றும் துணைத் தலைவர் அசோக்குமார் ஆகியோர் வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் இதர நிர்வாகிகளுடன் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து கோரிக்கைகள் குறித்து பேசிவிட்டு திரும்பி வரும்போது, சங்க வளர்ச்சிக்கும், ஊழியர் நலன்களுக்கும் எதிராக செயல்பட்டு வரும் சிவகங்கை மகேந்திரன், பாலாஜி, பாலகுரு, பாலமுருகன், சேகர், ஆனந்தபூபாலன், மயில்வாகனன், பார்த்திபன் ஆகியோர் சில குண்டர்களுடன் சேர்ந்து தோழர்கள் எஸ்.பார்த்திபன், தமிழரசன் மற்றும் அசோக்குமார் ஆகியோர் மீது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அறை முன்பு கொலைவெறித் தாக்குதல் நடத்தி ரத்த காயங்களும், கொடுங்காயங்களும் ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர்களின் நியாயமான கோரிக்கைகளை, அவர்களை நேரில் அழைத்துப் பேசி சுமூகத் தீர்வு கண்டிட மனமில்லாத சிவகங்கை மாவட்ட ஆட்சியர், ஊழியர்கள் போராட்டத்தை முடக்கவும், போராடும் ஊழியர்களை ஒடுக்கவும் திட்டமிட்டு சதி செய்து, சங்க நிர்வாகிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பது போல் அழைத்து, எதிர் கோஷ்டியினரின் கொம்புகளைச் சீவி, அவர்கள் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அறை முன்பு கொலைவெறித் தாக்குதலை ஏவி, வன்முறை மூலமாக அச்சுறுத்தி, மிரட்டி, அடிபணிய வைக்க முயற்சித்திருக்கும் போக்கை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிப்பதுடன், வருவாய்துறை அலுவலர் சங்கத் தலைவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அறை முன்பு தாக்கப்படும் வரையில் கைகட்டி வேடிக்கை பார்த்த சிவகங்கை காவல் துறையினரின் இழிசெயலையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

உரிமைகளுக்காக போராடும் ஊழியர்களை, வன்முறையால் ஒடுக்கப் பார்க்கும் போக்கு சமுதாயத்தில் சர்வாதிகாரத்தை வேரூன்ற வைக்கும் முயற்சியாகும். இத்தகைய முயற்சிகளை மக்கள் தொண்டாற்ற பணிக்கப்பட்டிருக்கும் மாவட்ட ஆட்சியரே தலைமை ஏற்று நடத்துவதும், மக்களுக்கு பாதுகாப்பு வழங்க நியமிக்கப்பட்டிருக்கும் காவல் துறையினர் அதை தலைவணங்கி வேடிக்கை பார்ப்பதும், ஜனநாயகத்தின் குரல் வளையை நெறிக்கும் செயலாகும். இத்தகைய ஹிட்லரிச கோட்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டியது மேம்பட்ட சமுதாயத்தை உருவாக்க உறுதி பூண்டிருக்கும் அரசு ஊழியர்களின் தலையாய கடமையாகும்.

எனவே வன்முறைக்கு வித்திட்ட சிவகங்கை மாவட்ட ஆட்சியரையும், அதை வேடிக்கை பார்த்திட்ட சிவகங்கை காவல் துறை கண்காணிப்பாளரையும் கண்டித்து தமிழகம் முழுவதும் இன்று 6.7.2017ம் தேதி கண்டன ஆர்ப்பார்ட்டம் நடைபெறுவதோடு, வருவாய்த்துறை அலுவலர் சங்க நிர்வாகிகள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய மகேந்திரன் உள்ளிட்ட நபர்கள் மீது கொலை முயற்சிக்கான முதல் தகவல் அறிக்கையை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 307ன்படி பதிவு செய்து, அவர்கள் அனைவரையும் உடனடியாக கைது செய்து சிறையிலடைக்க வலியுறுத்தியும், தொடர் முழக்கங்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்டக் கிளைகள் மூலமாக, அரசு அலுவலக வளாகங்களில் எழுப்பப்படும். தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு ஊழியர்கள் அனைவரும் இந்த கண்டன ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டு தாக்குதலுக்கு ஆளான ஊழியர்களுக்கு ஆதரவாக நிற்பார்கள். கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராடுவார்கள்.

**(மு. அன்பரசு)**
மாநில பொதுச் செயலாளர்